# கண்டி மாநகர சபை

## கண்டி மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 11 ஆந் திகதி நகரபிதாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கண்டி மாநகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1994 முதல் 2009 வரையான ஆண்டுகளில் முற்கொடுப்பனவின் கீழ் ஏற்கப்பட்ட ரூபா 1,935,684 தொகையான செலவினம் ஒவ்வொரு ஆண்டினதும் செலவினக் கணக்குகளுக்குச் சீராக்கப்படாது தொடர்ந்து நடைமுறைச் சொத்துக்களாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சுயாதீனமான ஆயுர்வேத மருத்துவமனைக்காக மருந்து விநியோகிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்திடமிருந்து 2012 ஆம் ஆண்டிற்காகப் பெறப்பட்டிருந்த ரூபா 260,000 தொகையான பொருளுதவி இருந்துக் கணக்கிலும் வருமானம் உதவியின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்கு உரித்தான கணக்குகளின் படி, மீதி ரூபா 202,406,489 தொகையானதுடன் துணைப் பதிவேடுகளின் படி அக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 139,649,111 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,246,769,453 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 192,632,737 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 95,264,377 ஆக இருந்தது.

### 2.2 வங்கிக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 வரையான ஆண்டுகளுக்கு உரித்தான ரூபா 95,867 பெறுமதியான 08 மறுக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது மீளாய்வாண்டு வரை முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை வங்கியின் 032764 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கிற்காக 2012 பெப்ரவரி முதல் திசெம்பர் வரை நேரடியாகப் பெறப்பட்டிருந்த ரூபா 101,645 தொகையும் 158-1-001-0-1295900 ஆம் இலக்க மக்கள் வங்கியின் நீர்க் கணக்கிற்கு பெறப்பட்டிருந்த ரூபா 2,494,098 தொகை இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வழங்கப்பட்டு, 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 102,500 பெறுமதியான 04 காசோலைகள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 யூன் 01 ஆம் திகதி முதல் 2012 நவம்பர் 30 வரை 06 சந்தர்ப்பங்களின் போது வைப்புச் செய்யப்பட்டு எனினும் தேறாத ரூபா 58,690 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகரபிதாவினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 560,550 | 537,026 | 93,751 |
| (ii) | வாடகை | 54,895 | 62,007 | 91,888 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 28,636 | 48,488 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 246,450 | 140,292 | 281,471 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 48,379,611 தொகையான கட்டணம் பெறவேண்டியதாகக் காணப்பட்டது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 5,740,100 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 42,639,511 |

### 2.3.3 வாகனத் தரிப்பிட வருமானம்

2012 நவம்பர் 16 ஆம் திகதி 1785 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கு முரணாக வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாது தனியார் வாகனத் தரிப்பிடம் இயங்கியிருந்ததுடன், ஏறத்தாழ 03 ஆண்டுகாலத்திற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிராமையால் சபைக்கு ரூபா 16,500 தொகையும் அரசாங்கத்திற்கு ரூபா 3,480 தொகையுமாக ரூபா 20,340 தொகையான வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

### 2.3.4 மத்திய சந்தைத் தொகுதி வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2004 சனவரி 01 ஆம் திகதி முதல் மத்திய சந்தைத் தொகுதியின் நாளாந்த வியாபாரத்திற்காக 304 தற்காலிக இடங்களுக்காக மாதாந்தம் ரூபா 500 தொகையான குத்தகைத்தொகைக்கு நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அக் கட்டணம் மீளாய்வாண்டு வரை திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் சபைக்கு பாரிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) மத்திய சந்தைத் தொகுதியில் “ கடஇட” எனும் பகுதியில் 13 இடங்களுக்காக 2004 ஆம் ஆண்டு முதல் வருமானம் அறவிடப்படாமையால் ரூபா 372,624 அளவிலான வருமானம் சபைக்குக் கிடைக்கப்பெறாது போயிற்று.

(இ) தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த 237 கடை உரிமையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,178,255 தொகையான கட்டணம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் இதில் 188 கடைகளில் இருந்து பெறவேண்டிய வருமானம் 03 மாதங்களுக்கு மேலான காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

(ஈ) மத்திய சந்தைத் தொகுதியில் 28 கடைகள் உப குத்தகைக்கிடப்பட்டிருந்தன.

### 2.3.5 பரிவர்த்தனைக் கோபுரங்களின் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி, தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்காக 5-20 மீட்டர் உயரம் வரை ரூபா 20,000 தொகையும் இதற்கு மேற்படும் ஒவ்வொரு மீட்டருக்கும் ரூபா 100 படி கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் அத்துமீறி நிர்மாணிக்கப்பட்டிருந்த 59 பரிவர்த்தனைக் கோபுரங்களுக்கு உரித்தாக சபைக்கு ஏறத்தாழ ரூபா 1,180,000 இற்கு மேலான தொகை கிடைக்கப்பெறாது போயிற்று.

(ஆ) மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலில் v ஆம் பட்டோலையின் 06 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஒவ்வொரு 05 மீட்டர் உயரத்திற்கும் ரூபா 10,000 படியான கட்டணம் அறவிடப்பட வேண்டுமென எடுத்துக்காட்டப்பட்ட போதிலும் அதிகாரப் பகுதிகளில் அத்துமீறி நிர்மாணிக்கப்பட்டிருந்த பரிவர்த்தனைக் கோபுரங்கள் உத்தியோகத்தர்களால் சபைக்கு அறிவிக்கப்பட்டு இது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 63 பரிவர்த்தனைக் கோபுரங்கள் மூலம் ஒலிபரப்பு வசதிகள் வழங்கப்பட்டிருந்த கம்பனிகளின் படி, வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அனுமதிப்பத்திரக் கட்டணமாக எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஏறத்தாழ ரூபா 500,000 இற்கு மேற்பட்ட தொகை சபைக்குக் கிடைக்கப்பெறாது போயிற்று.

(ஈ) 2010 நவம்பர் 26 ஆம் திகதிய 1682 ஆம் இலக்க, 2011 நவம்பர் 04 ஆம் திகதிய 1731 ஆம் இலக்க மற்றும் 2012 நவம்பர் 16 ஆம் திகதிய 1785 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் படி, 2011, 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரங்களுக்காக ஒரு வருடத்திற்கு ரூபா 5,000 தொகையான வியாபார வரி நிர்ணயிக்கப்பட்டிருந்த

போதிலும் அந் நிர்ணயிப்பின் படி கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, கடந்த 03 ஆண்டுகளுக்கு மாத்திரம் உரித்தான தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரங்களுக்காக இடவசதிகள் வழங்கப்படுவதற்கு உரிய கட்டணம் அறவிடப்பட்டிராத காரணத்தால் ரூபா 960,000 தொகை சபைக்குக் கிடைக்கப்பெறாது போயிற்று.

### 2.3.6 போகம்பற வாரந்த சந்தை உரிமை குத்தகைக்கிடல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) போகம்பற வாரந்த சந்தைக் கட்டணத்தை அறவிடும் உரிமை குத்தகைக்கிடல் உடன்படிக்கையின் 02 ஆவது நிபந்தனையின் படி உடன்படிக்கையிடப்பட்ட நாள் முதல் 03 மாதங்களுக்குள் மொத்த வரித்தொகை முற்றாகச் செலுத்தி நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக 40 நாட்கள் தாமதமாக்கிச் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், உடன்படிக்கையின் பிரகாரம் அத் தாமதம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நாளாந்த குப்பைக் கட்டணம் 2009 ஆம் ஆண்டு முதல் மாற்றமின்றிக் காணப்பட்ட போதிலும் குப்பைச் சேகரிப்பு மற்றும் அகற்றல் கிரயம் உயர்வடைவதற்கு இணையாக இக் கட்டணத் திருத்தத்திற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் சபைக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்த வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

(இ) சபை எல்லைக்கு உரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது வியாபார வரி செலுத்தப்படாது, நடாத்தப்பட்டிருந்த 58 வியாபார நிறுவகங்கள் நிலவியமை கண்டறியப்பட்டதுடன், இதன் காரணமாக மீளாய்வாண்டிற்காக ரூபா 290,000 தொகையான வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

### 2.3.7 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்

2012 ஆம் ஆண்டிற்கு உரித்தாக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிராததுடன் வியாபாரங்களால் சபைக்கு ரூபா 1,428,200 தொகையான வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

### 2.3.8 அறிவித்தல் பலகைகள்

2012 நவம்பர் 16 ஆம் திகதிய 1785 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் படி, அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவிடப்படாததன் காரணமாக ரூபா 2,878,963 தொகை சபைக்குக் கிடைக்கப்பெறாது போயிற்று.

## 2.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

### குப்பை கொண்டு செல்லப்படுவதற்காக வாகனங்களைக் கொள்வனவு செய்தல்

ரியோ கிரபிக் நிறுவனத்தின் மூலம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சீன உற்பத்தியான புதிய வாகன வகையான கம்பெஸ்டர் உள்நாட்டு சந்தைக்குப் புதிதாகக் கொண்டுவரப்படும் வாகன வகையானமையால் இவ்வாகனத்திற்காக உள்நாட்டு சந்தையில் உதிரிப் பாகங்கள் மற்றும் பராமரிப்புத் தொடர்பான சிக்கல்கள் ஏற்படக்கூடும் என தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு சுட்டிக்காட்டியிருந்தது. இது கருத்திற்கொள்ளப்படாது அவ் வகைக்குரித்தான 04 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 26,864,588 தொகை செலவிடப்பட்டிருந்தது. சேவையில் ஈடுபடுத்தப்படும் முதற் தடவையிலிருந்தும் அவ் வாகனம் பாரியளவில் தொழிநுட்பக் கோளாறுகளுக்கு உட்பட்டிருந்ததன் விளைவாக கிளச் பிளேட், ஹைட்ரோலிக் ஜக், கிளச் பம்ப், ஜக் ஒயில் சீல், ஒயில் பில்டர், டீசல் பில்டர், வழங்குனரால் மீளமைக்கப்பட்டிருந்ததுடன் சபையால் முதல் 10 மாதங்களும் அப் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 360,369 தொகை செலவிடப்பட்டிருந்தது.

பரிசோதனைத் திகதியான 2013 பெப்ரவரி 21 இல் உள்ளவாறும் இதில் 02 வாகனங்கள் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் ஒரு வாகனம் பழுதுபார்ப்பிற்கு தேவையான உதிரிப் பாகங்கள் உள்நாட்டுச் சந்தையில் இன்மையால் மேலதிக உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன் ஒரு பயணத்தின் பின்னர் மீள பழுதுபார்ப்பிற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆதனக் கடன் வட்டிக்காக அரசாங்கத்தின் பங்களிப்புத் தொகையாக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டிற்காக நிதியத்தில் ரூபா 3,429,252 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இத் தொகை மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இற்றைக்கு 10 ஆண்டுகளுக்கு மேல் நேர்ந்த வாகன விபத்துக் காரணமாக, சபைக்கு நேர்ந்த ரூபா 380,460 தொகையான நட்டத்தை அறவிடுவதற்காக முறையான நடைமுறை பின்பற்றப்படாது இதன் மூலம் நேர்ந்த நட்டம் நிலுவை வருமானமாக தொடர்ந்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) சபையின் மின்சார முறைமை 1995 ஆம் ஆண்டின் போது இலங்கை மின்சார சபைக்கு ஒப்படைக்கப்படுகையில் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 43,599,525 தொகையும் ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தின் போது நிலவிய மின்சாரக் கடன்பட்டோர் ரூபா 50,443,104 தொகையும் தீர்க்கப்படாது தொடர்ந்து சபைச் சொத்துக்களாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) 2013 ஏப்ரல் 20 ஆம் திகதி இளைப்பாறிய குடும்ப சுகாதார உத்தியோகத்தரின் 2008 சனவரி 18 ஆம் திகதி முதல் 2008 ஆகஸ்ட் 06 ஆம் திகதி வரையான கால எல்லைக்கு உரித்தாக சபைக்கு அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட நிலுவை நீர்க் கட்டணமான ரூபா 34,567 தொகை அவ் உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்தோ அல்லது ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்தோ அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

மீள்சுழற்சிக்கு உட்டுபடுத்தப்படக்கூடிய பொருட்களைச் சேகரித்து விற்பனை செய்வதற்காக நகரத்தில் ஆரம்பிக்கப்பட்ட வள நிலையம் 2012 திசெம்பர் 31 வரை ரூபா 5,932,695 தொகையான விற்பனை வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் அப் பொருளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 5,483,220 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் மூலம் உழைக்கப்பட்ட வருமானமும் செலவினமும் சபை வருமானச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. குப்பை சேகரிக்கப்படும் நிலையங்களில் பணப் பயன்பாட்டு நடவடிக்கைகள் அமைய ஊழியர்கள் மூவரை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இதற்கு உரித்தாக

சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 460,000 தொகை வைப்புக் கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அரச நிதி தொடர்பாக முறையான பாதுகாப்பு நடைமுறை ஒன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு அகக் கணக்காய்வு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) களஞ்சிய நிர்வாகம்